**பரமக்குடி நகராட்சி அலுவலகம்,**
**நாள்.28 .03.2022**

**அன்புடையீர்,**

பரமக்குடி நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் நிகழும் திருவள்ளுவராண்டு_மார்ச் மாதம் 31ம் தேதி (31.03.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கீழ்க்காணும் பொருள்கள் குறித்த கூட்டம் நடைபெற உள்ளது. நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**தலைவர்**
**பரமக்குடி நகர்மன்றம்**

| | |
|---|---|
| பொருள்.1 | **<u>நகர்மன்றத் தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் சிறப்பு தீர்மானம்–</u>**<br><br>தமிழகத்தில் 19.02.2022 அன்று நடைபெற்ற நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில், மாண்புமிகு.தமிழக முதல்வர் தளபதி.மு.க.ஸ்டாலின் தலைமையில், கழக உறுப்பினர்கள் மற்றும் கூட்டணி கட்சி உறுப்பினர்கள் பெருவாரியான உள்ளாட்சி அமைப்புகளில் மகத்தான வெற்றி பெற்றமைக்கு, பரமக்குடி நகர்மன்றத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் இந்நகர்மன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு.தமிழக முதல்வர் அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.<br>**தீர்மானம் எண்.7, நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் சிறப்பு தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் மார்ச் 2022ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>**அலுவலகக்குறிப்பு –**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>**தீர்மானம் எண்.8, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.3 | பரமக்குடி நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச் 2022ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>**அலுவலகக்குறிப்பு –**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>**தீர்மானம் எண்.9, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.4 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் மார்ச் 2022ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>**அலுவலகக்குறிப்பு –**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.10, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| பொருள்.5 | பரமக்குடி நகராட்சி சுகாதார அலுவலர் அவர்களின் மார்ச் 2022ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>**அலுவலகக்குறிப்பு –**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>**தீர்மானம் எண்.11, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.6 | பரமக்குடி நகரம் எமனேஸ்வரம் கிராமம் வார்டு –E, பிளாக்–4, நகரபுல எண்.11/7D இல் 2.17 ஏக்கர் (8836ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் அரசாணை எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.04.05.2017 மற்றும் அரசாணை எண்.172 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.13.10.2017 ஆகியவற்றின்படி கொள்கை அளவிலான ஒப்புதல் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் (பொ) இராமநாதபுரம் அவர்களால் ந.க.எண்.714/2021/இராமா நாள்.22.10.2021–இன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவில் அமைந்துள்ள உத்தேச சாலைகள் மற்றும் பூங்கா இடங்கள் தானபத்திர எண்.4971/2021 நாள்.21.10.2021–ன்படி நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் (பொ) இராமநாதபுரம் அவர்களுக்கு பதிவு செய்து அதன் உண்மை நகலினை (ஜெராக்ஸ் காப்பி) நகராட்சிக்கு சமர்ப்பித்துள்ளார். அனுமதியற்ற மனைப்பிரிவு ஒப்புதல் வரைபடம் மற்றும் சாலைகள் பூங்கா இடங்களை நகராட்சி பராமரிப்பதற்கு எடுத்துக்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு, வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு–**<br>1.மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>2.பொது ஒதுக்கீடு சாலை மற்றும் பூங்கா இடத்தினை நகராட்சி பராமரிப்புக்கு எடுத்துக்கொள்ளலாம்<br>(ந.க.எண்.0035/2022/எப்1)<br><br>**தீர்மானம் எண்.12, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.7 | இந்நகராட்சி நூலகத்திற்கு கீழ்க்கண்டுள்ள நாளிதழ்களை 2022–2023ஆம் ஆண்டுக்கு கொள்முதல் செய்ய உத்தேச செலவினம் ரூ.22000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>1.தினத்தந்தி<br>2.தினகரன்<br>3.தினமணி<br>4. தே இந்தியன் எக்ஸ்பிரஸ்<br>5.தி இந்து<br>6.முரசொலி<br>7.தினமலர்<br>**அலுவலகக் குறிப்பு–**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**தீர்மானம் எண்.13, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| பொருள்.8 | பரமக்குடி நகராட்சியில் பொதுமக்களால் தொடரப்படும் நீதிமன்ற வழக்குகள் மற்றும் நகராட்சியில் நிலுவையில் உள்ள வழக்குகளில் ஆணையாளர், பரமக்குடி நகராட்சி சார்பில், மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் சார்பு நீதிமன்றம் பரமக்குடி வழக்கில் ஆஜராகி வழக்கினை நடத்திட திரு.இளங்கோவன் வழக்கறிஞர் அவர்களை நகராட்சி சார்பாக நகர்மன்ற வழக்கறிஞராக நியமித்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 893/2022சி1)<br>**தீர்மானம் எண்.14, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.9 | சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் பரமக்குடி நகராட்சிக்கு எதிராக தொடரப்பட்டு நடைபெற்று வரும் உயர்நீதிமன்ற வழக்குகள் மற்றும் இனிவரும் காலங்களில் நகராட்சிக்கு எதிராக தொடரப்படும் வழக்குகளில் நகராட்சி சார்பில் பிரதிநித்துவம் செய்து வழக்கு நடத்திட சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வழக்கறிஞர் திரு.எம்.கண்ணன் அவர்களை நியமித்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.  893 /2022சி1)<br>**தீர்மானம் எண்.15, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.10 | இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வந்த டி.என்.65, ஏ.ஒய்.3865 டிராக்டர் வாகனத்திற்கு வருடாந்திர தகுதிச்சான்று (2022–2023) பெறுவதற்கும், தேவையான பழுதுப்பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் பயன்படுத்துவதற்கும், மேற்குறிப்பிட்ட டிராக்டர் வாகனத்திற்கு புதிய டிரைலர் இயந்திரம் கொள்முதல் செய்வதற்கும், சம்மந்தப்பட்ட உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெற்று, அதற்கான உத்தேச செலவினம் ரூ.2,30,000/–க்குள் பணிகள் மேற்கொண்டு வருடாந்திர தகுதிசான்று பெறுவதற்கும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு–</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பொதுமக்களின் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி பொதுநிதியிலிருந்து செலவு செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.16, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.11 | இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் JCB– டோசர் வாகனம் டி.என்.65, எப்–3157 வாகனத்திற்கு பழுதுப்பணிகள் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட JCB நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற உள்ளூர் பணிமனை அல்லது நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெற்று பழுதுப்பணிகளை முடித்து மேற்கண்ட வாகனத்தினை பயன்பாட்டிற்கு கொண்டுவர, பழுதுப்பணிகளை செய்ய உத்தேச செலவினத் தொகை ரூ.2,15,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு–</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) இந்நகராட்சி பொதுமக்களின் பொதுசுகாதாரம் காத்திட, பொதுசுகாதார அவசர அவசியம் கருதி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.17, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| பொருள்.12 | இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் கழிவுநீர் வாகனம் டி.என்.65–8052–ற்கு வருடாந்திர தகுதிசான்று முடிவடைவதாலும், புதியதாக தகுதிசான்று பெறுவதற்குத் தேவையான பழுதுப்பணிகள் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட உள்ளூர் பணிமனை அல்லது நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெற்று, இதற்கான உத்தேச செலவினம் ரூ.2,65,000/–க்குள் பழுதுப்பணிகள் மேற்கொண்டு, வருடாந்திர தகுதி சான்று பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு–</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பொதுமக்களின் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி, பொதுநிதியிலிருந்து செலவு செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.18, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.13 | இந்நகராட்சி வருவாய் நிதி (Revenue fund) குடிநீர் (Water Supply Fund) கல்வி நிதி (Education fund) ஆகியவற்றிற்கான 2022–2023ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு மதிப்பீடு தயார் செய்துள்ளது. மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு–</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**தீர்மானம் எண்.19, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.14 | இந்நகராட்சியின் **15** வது நிதிக்குழு மான்யதிட்டம் **2020–2021** (UNTIED GRAND) ன் கீழ் பணிகள் செய்ய உதவி இயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு துறை, இராமநாதபுரம் அவர்கள் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி கோரி விளம்பரம் செய்த வகையில் மதுரைமணி நாளிதழிலிருந்து ரூ.**23,990/–** ஐ வழங்ககோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன்படி மேற்படி நாளிதழுக்கு ரூ.**23,990/–** ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு–</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.20, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.15 | இந்நகராட்சியின் **15** வது நிதிக்குழு மான்யதிட்டம் **2020–2021** (TIED GRAND) ன் கீழ் பணிகள் செய்ய உதவி இயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு துறை, இராமநாதபுரம் அவர்கள் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி கோரி விளம்பரம் செய்த வகையில் மக்கள்குரல் நாளிதழிலிருந்து ரூ.**18144/–** ஐ வழங்ககோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன்படி மேற்படி நாளிதழுக்கு ரூ.**18144/–** ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு–</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.21, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.16 | இந்நகராட்சியின் **15** வது நிதிக்குழு மான்யதிட்டம் **2021–2022** (UNTIED GRAND) ன் கீழ் புதுநகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு உதவி இயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு துறை, இராமநாதபுரம் அவர்கள் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி கோரி விளம்பரம் செய்த வகையில் மாலைமலர் நாளிதழிலிருந்து ரூ.**14,280/–**ஐ வழங்ககோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன்படி மேற்படி நாளிதழுக்கு ரூ.**14280/–**ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு–</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து |

| | |
|---|---|
| | செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.22, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.17 | இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018–19 ன் கீழ் பாம்புவிழுந்தான் கிராமத்தில் உள்ள இந்நகராட்சிக்கு சொந்தமான குப்பைகளை தரம் பிரித்தெடுக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிய வகையில் இயக்குநர், தகவல் மற்றும் செய்தி மக்கள் தொடர்பு துறை, வழியாக விளம்பரம் செய்த வகையில் SRESHTH COMMUNICATIONS, சென்னை நிறுவனத்தில் இருந்து ரூ.26,092/–ஐ வழங்ககோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன்படி மேற்படி நிறுவனத்திற்கு ரூ.26,092/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு–</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.23, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.18 | இந்நகராட்சியின் 15 வது மாநில நிதிக்குழு பரிந்துரை நிதி 2020–2021 ன் கீழ் Tied grant ஏற்கனவே செயல்பட்டுவரும் 3 நுண்ம உரக்கூட மையங்களுக்கு புதிதாக 3 எண்ணம் Shreding Machine ரூ.36.00 இலட்சத்திற்கு சப்ளை செய்ய உரிய ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு வேலை உத்தரவு ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டு Shreding Machine தயார் செய்யும் பணி முடியும் தருவாயில் உள்ளது. மேற்படி Shreding Machine பொருத்துவதற்கு உரிய மேடைகள் மற்றும் சாய்தளம் அமைக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. மேற்படி பணிகளை செய்ய இந்நகர்மன்ற தீர்மான எண். 1537 நாள் 31.12.2022ன்படி அனுமதி அளித்ததின் பேரில் 25.01.2022 ம் தேதி அன்று ஒப்பந்தபள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்யும்பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**வ.எண்** / **பணியின் வவிரம்** / **ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத் தொகையை விட கூடுதல் / குறைவு**<br>1. / திரு.எஸ்.சந்திரன், ஒப்பந்ததாரர் / 0.05% குறைவு<br>2. / திரு.எம்.சங்கர், ஒப்பந்ததாரர் / 0.20% கூடுதல்<br><br>**<u>அலுவலக குறிப்பு–</u>**<br>வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.சந்திரன் ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டை விட 0,05% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.<br><br>**தீர்மானம் எண்.24, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.19 | இந்நகராட்சிக்கு பயன்பாட்டிற்கு 2022–23ம் ஆண்டிற்கு தேவையான எழுதுபொருட்கள், பேப்பர், டோனர், பதிவேடுகள் மற்றும் படிவங்களை, சிதம்பரனார் மாவட்ட கூட்டுறவு அச்சகம் கோவில்பட்டி, லெட்சுமி பேப்பர் ஸ்டோர் பரமக்குடி, இராமநாதபுரம் ராம்கோ கூட்டுறவு அச்சகம் பரமக்குடி, ஜே.பி. மார்க்கெட்டிங் மதுரை மற்றும் பெஸ்ட் நெட்வொர்க், இராமநாதபுரம் ஆகிய நிறுவனங்களில் வாங்கிக்கொள்ள தேவையான உத்தேச தொகை ரூ.1500000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு–</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் |

| | |
|---|---|
| | அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.25, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.20 | **15**வது நிதிக்குழு சிறப்பு மானியம் – தேசிய சுகாதாரப் பணி **2021–22**–இன் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையங்கள் கட்டுவதற்கு ரூ.**50.00** லட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br><br>**1)** இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள பாரதியார் பூங்காவில் ( நகராட்சி வாரச்சந்தை) சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையம் கட்டுதல் — ரூ.**25.00** லட்சம்<br>**2)** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட எமனேஸ்வரம் தர்மராஜபுரத்தில் சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையம் கட்டுதல் — ரூ.**25.00** லட்சம்<br><br>மேற்படி பணிகளுக்கு **12.01.2022**–ந் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு வேலை உத்தரவு **25.01.2022**–இல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடப் பணிகளுக்கு மண் பரிசோதனை செய்யவும், கட்டிட வடிவமைப்பு தயார் செய்து கொடுப்பதற்கும், முதல்வர், அண்ணா பொறியியல் கல்லூரி, பட்டுக்கோட்டைக்கு கட்டணத் தொகையாக ரூ.**64,900/–**ஐ, செலுத்துவற்கும் மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு–</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.26, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.21 | இந்நகராட்சி பகுதியில் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தல்–2022க்கு நகராட்சி பகுதியில் உள்ள பள்ளி கட்டிடங்களில் உள்ள வாக்குச்சாவடி மையங்களுக்கு வாக்குச்சாவடி எண்கள் எழுதவும், ஒவ்வொரு வாக்குசாவடி மையங்களுக்கும் கூடுதலாக LED குழல் விளக்கு வசதி மற்றும் மின்விசிறி வசதி, குடிநீர் வசதிகள், ஷாமியானா பந்தல் வசதிகள் நகராட்சிக்கு சொந்தமான பள்ளிக்கட்டிடங்களில் பழுதான சாய்வுதளம் புதுப்பித்தல் மற்றும் புதிதாக சாய்வு தளம் அமைத்தல் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பொருட்டு ஏற்படும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.700000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்கு, மேலும் இப்பணிகள் அனைத்தும் தேர்தல் தொடர்பான முக்கிய பணிகளாக இருப்பதாலும் இப்பணிகளை உரிய காலத்திற்குள் முடிக்கும் பொருட்டும் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளவும் மேற்படி பணிகளை இந்நகராட்சியில் பதிவுப் பெற்ற ஒப்பந்ததாரர் திரு.எஸ்.சந்திரன் என்பவர் மூலம் ஒப்படைப்பு பணியாக மதிப்பீட்டு விலை விகிதத்தில் செய்து முடிக்கப்பட்டதையும், பட்டியல் தொகை ரூ.697051/–க்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1.மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>2. நகரில் உள்ள 83 வாக்குச்சாவடி மையங்களிலும் தேர்தல் முன்னேற்பாடுகள் சம்மந்தமாக அவசரம் அவசியம் கருதி செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு பட்டியல் தொகை ரூ.697051/–ஐ வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.27, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

**பொருள்.22**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட 8–வது வார்டு வி.பி.காலனி பகுதியில் மழைநீர் வடிகால் உயர்த்தி கட்டும் பணியை ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் செய்ய இந்நகர்மன்ற தீர்மான எண். நாள்.31.12.2021 ன்படி அனுமதி அளித்தின் பேரில் 25.01.2022ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும். முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுதொகையைவிட கூடுதல்/ குறைவு |
|---|---|---|
| 1. | திரு.எஸ்.சந்திரன், ஒப்பந்ததாரர் | 0.09% மதிப்பீட்டு விலையை விட குறைவு |
| 2. | திரு.எம்.சங்கர், ஒப்பந்ததாரர் | 0.34% மதிப்பீட்டு விலையை விட கூடுதல் |

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.எஸ்.சந்திரன் ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டை விட 0.09% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம். மேலும் பொதுசுகாதாரம் மற்றும் பொதுமக்களின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.28, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.23**

இந்நகராட்சி பகுதியில் நடைபெற்ற உள்ளாட்சி தேர்தல்–2022க்கு வாக்கு எண்ணும் மையமான அழகப்பா பல்கலைகழக கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் கூடுதலாக LED குழல் விளக்கு வசதி, போக்கஸ் விளக்குகள் மற்றும் மின்விசிறி வசதி, குடிநீர் வசதிகள், ஷாமியானா பந்தல் வசதிகள் மற்றும் மரத்தால் ஆன தடுப்பு வேலிகள் அமைத்து அதில் தகரத்துடன் கூடிய தடுப்பு வேலிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பொருட்டு ஏற்படும் உத்தேச மதிப்பீடுத்தொகை ரூ.9,50;000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்கு, மேலும் இப்பணிகள் அனைத்தும் தேர்தல் தொடர்பான முக்கிய பணிகளாக இருப்பதாலும் இப்பணிகளை உரிய காலத்திற்குள் முடிக்கும் பொருட்டும் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளவும் மேற்படி பணிகளை இந்நகராட்சியில் பதிவுப் பெற்ற ஒப்பந்ததாரர் திரு.எஸ்.சந்திரன் என்பவர் மூலம் ஒப்படைப்பு பணியாக மதிப்பீட்டு விலை விகிதத்தில் செய்து முடிக்கப்பட்டதையும், பட்டியல் தொகை ரூ.9,50,000/–க்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1.மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2. நகரில் உள்ள வாக்கு எண்ணும் மையத்தில் தேர்தல் முன்னேற்பாடுகள் சம்மந்தமாக அவசரம் அவசியம் கருதி செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு பட்டியல் தொகை ரூ.9,50,000/–ஐ வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.29, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.24**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.14006/2021/தி2/1 நாள்.08.09.2021ன் கடிதத்தில் மாண்புமிகு.நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2021–22ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாகத்துறை மானியக்கோரிக்கையில் நகராட்சி பகுதிகளில் உள்ள குளங்களை தூர்வாரி மேம்பாடு செய்ய வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளதால், அதற்கான கருத்துரு சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீடு லட்சத்தில் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1. | வார்டு எண்.8, கிறிஸ்த்து காலணியில் உள்ள குளத்தினை துார்வாரி மேம்படுத்தும் பணி | 65.00 |

அதன்படி, இந்நகராட்சிப் பகுதியில் மேற்காணும் விவரப்படி குளத்தை துார்வாரி மேம்படுத்தும் பணிக்கு ரூ.65.00 லட்சத்திற்கு பணி மேற்கொள்வதற்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு–</u>**

1) அனுமதிக்கலாம், மேற்படி நிதியினை ஏதேனும் ஒரு திட்டத்தில் முழுமான்யமாக வழங்கிடவும் கோரலாம்.

2) அவசர அவசியம் கருதியும் பொதுமக்களின் நலன் கருதியும், மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று திட்டப் பிரேரணை சமர்ப்பித்து நடவடிக்கை தொடரலாம்.

3) விரிவான திட்ட மதிப்பீடு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பித்து நிர்வாக அனுமதி பெற்றிட மேல்நடவடிக்கை தொடரலாம்.

**தீர்மானம் எண்.30, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.25

மாண்புமிகு நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு அவர்களால் 2021-2022ம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத் தொடரில் 24.08.2021-ம் தேதியில் நகராட்சிகளில் உள்ள தெருமின்விளக்குகளை ஒளி உமிழ்வு டையோடு விளக்குகளாக (Light Emission Diode Lamps) மாற்றப்படும் என அறிவித்ததைத் தொடர்ந்து பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருமின்விளக்குகளை ஒளி உமிழ்வு டையோடு விளக்குகளாக (Light Emission Diode Lamps) மாற்றுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து சமர்ப்பித்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித நகஎண்.35871/2014/E1 நாள்:08.09.2021 ன்படி தெரிவிக்கப்பட்டு வரப்பெற்றுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அதன்படி, பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளிலும் மின் சேமிப்பு நிறுவனம் (ESCO) பரிந்துரை செய்த குறிப்பிட்ட திறன் கொண்ட (Watts) ஒளி உமிழ்வு டையோடு விளக்குகளாக மாற்றுவதற்கு பணி தேர்வு செய்யப்பட்டு , மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**பணியின் விவரம் பின்வருமாறு**

| SL.No | Name of the Works | No.of Work | Estimate Rs in Lakhs |
|---|---|---|---|
| 1. | Conversion of all kinds of street light into energy efficient LED Light at Paramakudi Municipality | 1 | 330.00 |

**<u>அலுவலகக் குறிப்பு–</u>**

1. அனுமதிக்கலாம், மேற்படி நிதியினை ஏதேனும் ஒரு திட்டத்தில் முழுமான்யமாக வழங்கிடவும் கோரலாம்.
2. அவசர அவசியம் கருதியும் பொதுமக்களின் நலன் கருதியும் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பிரேரணை சமர்ப்பித்து நடவடிக்கை தொடரலாம்.
3. மேற்படி தேர்வு செய்யப்பட்டுள்ள பணியினை பரிந்துரை செய்து மேலனுப்பி வைத்திட மாவட்ட ஆட்சித்தலைவர், இராமநாதபுரம் அவர்களுக்கு திட்ட மதிப்பீடு சமர்ப்பித்து நடவடிக்கை தொடரலாம்.
4. விரிவான திட்ட மதிப்பீடு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பித்து நிர்வாக அனுமதி பெற்றிட மேல்நடவடிக்கை தொடரலாம்.

**தீர்மானம் எண்.31, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| பொருள்.26 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13—குட்பட்ட சின்னக்கடைத் தெரு நகரின் முக்கிய தெருக்களில் ஒன்றாகும். மேற்கண்ட சாலையின் இருபுறங்களிலும் உள்ள மழைநீர் வடிகால்கள் உடைந்தும், பள்ளமாகவும் இருப்பதால் கழிவுநீர் அதிகமாக தேங்கி சுகாதாரமற்ற சூழ்நிலையை உருவாக்குகிறது. மேலும், மழைக்காலங்களில் அதிகப்படியான நீர் கழிவுநீருடன் கலந்து அப்பகுதியில் சாலையில் குளம் போல் தேங்கி கிடக்கின்றது. இதனால் அப்பகுதியில் உள்ள மார்க்கெட்டிற்கு செல்லும் பொதுமக்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர். எனவே, மேற்படி பகுதிவாழ் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு, மேற்படி உடைந்த வாறுகால்களை சீரமைப்பு செய்வதற்கும், உயர்த்தி கட்டுவதற்கும் மற்றும் சிறுபாலங்கள் அமைப்பதற்கும் தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.6,20,000/—க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு—</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.32, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.27 | பரமக்குடி நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 22.11.2020ஆம் ஆண்டு நமது நகர் திறந்தவெளி மலம் கழித்தலற்ற (Open defecation free+) நகரமாக சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. எனவே அச்சான்றை மேலும் புதுப்பித்து தூய்மை இந்தியா திட்ட இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டியுள்ளது. அதன் ஒரு பகுதியாக இந்நகரில் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லை என்பதை உறுதிப்படுத்தும் விதமாகவும், தூய்மை இந்தியா திட்டம் திறந்தவெளி மலம் கழிப்பது ஒழித்தல் வழிகாட்டுதலின் படியும், தலைமை ஆசிரியர்கள், சுய உதவிக்குழுக்கள் மருத்துவர்கள் மற்றும் நகர் சார்ந்த தனிநபர்களிடமும் கழிப்பறையை மட்டுமே பயன்படுத்துவோம் என்றும், இந்நகரில் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லை என்றும் உறுதிமொழி பெறப்பட்டுள்ளது. மேலும் பொது மக்களுக்கு திறந்தவெளி மலம் கழித்தல் ஒழித்தல் மற்றும் குப்பை இல்லா நகரம் (GFC) சம்பந்தமாக தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. எனவே இந்நகரை திறந்தவெளி மலம் கழித்தலற்ற (Open Defecation Free+) சான்றை புதுப்பிக்க மற்றும் குப்பை இல்லாத நகரம் என அறிவிக்க அதற்கான நடவடிக்கையாக திறந்தவெளி மலம் கழிப்பது ஒழித்தல் மற்றும் குப்பைகள் இல்லாத நகரம் சம்மந்தமாக மக்கள் குரல் மற்றும் மாலை மலர் தினசரி நாளிதழில்களில் பரமக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் திறந்தவெளி மலம் கழிப்பிடமற்ற நகரமாக அறிவிக்கப்பட உள்ளது எனவும், இது குறித்து பொது மக்களிடம் ஆட்சேபனை ஏதும் இருந்தால் 15 தினங்களுக்குள் நகராட்சி ஆணையர் அவர்களிடம் நேரிலோ அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு தெரிவிக்கவும் 02.03.2022 அன்று விளம்பர அறிவிப்பு வெளியிடப்பட்டது.<br>மேற்கண்ட நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டு 15 தினங்களுக்குள் மேலாகியும், ஆட்சேபனை ஏதும் வரப்பெறாததால், பரமக்குடி நகராட்சி பகுதியில் 100விழுக்காடு திறந்தவெளி மலம் கழிப்பது ஒழித்தல் (ODF) மற்றும் குப்பை இல்லா நகரமாக (GC) அறிவிப்பு செய்யவும், மக்கள் குரல் மற்றும் மாலை மலர் நாளிதழ்களில் விளம்பர அறிவிப்பு செய்தமைக்கு செலவினம் முறையே ரூ.9975/—, ரூ.14137/— மொத்தம் ரூ.24112/—ஐ வழங்கவும், திறந்தவெளி மலம் கழிப்பது ஒழித்தல் மற்றும் குப்பை இல்லா கழிப்பிடமில்லா நகரமாக பரமக்குடி நகராட்சியை அறிவிப்பதற்காக பிரேரணையை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்.33, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| பொருள்.28 | பரமக்குடி நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக கொண்டு திரு. முருகானந்தம்_என்பவர் சார்பு நீதிமன்றம் பரமக்குடி வழக்கு எண்.I.A எண் 44/2022 OS எண்.37/2022 இன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். பரமக்குடி நகரம் பாரதி நகர் பழைய சர்வே எண்.92/1இல் உள்ள மனைப்பிரிவு பொது ஒதுக்கீடு இடம் உரிமை தொடர்பாக, வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.என் இளங்கோவன்அவர்கள் ஆஜராகி வழக்கை நடத்திடவும், மேற்படி வழக்கிற்கான செலவு தொகையினை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 867 /2022/எப்2)**<br>**தீர்மானம் எண்.34, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.29 | பரமக்குடி நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக கொண்டு திரு. கார்த்திகேயன் என்பவர் சார்பு நீதிமன்றம் பரமக்குடி வழக்கு எண்.I.A எண் 41/2022 OS எண்.36/2022 இன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். பரமக்குடி நகரம் பாரதி நகர் பழைய சர்வே எண்.92/1இல் உள்ள மனைப்பிரிவு பொது ஒதுக்கீடு இடம் உரிமை தொடர்பாக, வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.என் இளங்கோவன்அவர்கள் ஆஜராகி வழக்கை நடத்திடவும், மேற்படி வழக்கிற்கான செலவு தொகையினை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு–</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 866 /2022/எப்2**<br><br>**தீர்மானம் எண்.35, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.30 | பரமக்குடி நகராட்சி மதுரை–மண்டபம் சாலையில் உள்ள ஆணையாளர் குடியிருப்பு கட்டிடத்தில் மேற்கூரை பூச்சுக்கள் பெயர்த்து கீழே விழும் நிலையில் உள்ளது. கழிவறைகளில் உள்ள Water Claset உடைந்துள்ளது. ஜன்னல்கள், கதவுகள் பழுதாகி உள்ளது. எலக்ட்ரிக்கல் மற்றும் வயரிங் பொருட்கள் மிகவும் பழுதாகி உள்ளது. மேலும் காம்பவுண்ட் சுவர் இரும்பு கதவுகள் மற்றும் AC, RO Plant, இன்வெட்டர் ஆகியவை பழுதடைந்துள்ளன. எனவே, மேற்காணும் பணிகள் மேற்கொள்ளவும் கட்டிடம் முழுவதும் வர்ணம் பூசுவதற்கும், முகப்பு வாயிலில் வாகனங்கள் நிறுத்துவதற்காக பேவர் பிளாக் தளம் அமைப்பதற்கும், அம்மா உணவகத்தில் தளவாட சாமான்கள் வாங்குவதற்கும், வயரிங் பணிகள் மற்றும் தண்ணீர் வசதிகள் செய்து கொடுப்பதற்கும் ஏற்படும் மதிப்பீட்டுத் தொகை ரூ.9,00,000/–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறலாம். மேற்கண்ட ஆணையாளர் குடியிருப்பு கட்டிடத்தின் அவசியத் தேவையை கருத்தில் கொண்டு பணியினை விரைவாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவரும் பொருட்டும், மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்காணும் பணிக்கு மேல்நடவடிக்கை தொடர மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு–**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்காணும் ஆணையாளர் குடியிருப்பு கட்டிடத்தின் அவசியத் தேவையை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரலாம்<br><br>**தீர்மானம் எண்.36, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| பொருள்.31 | இந்நகராட்சியில் 36 வார்டுகளில் துப்புரவுப்பணியாளர்களைக் கொண்டு நாள்தோறும் வீடுவீடாகச் சென்று மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து வாங்கப்படுகிறது. மேலும், நகரில் அமைந்துள்ள கழிவுநீர் கால்வாய்களில் ஓரப்பகுதிகளிலும், சாலையின் இரு ஓரங்களிலும் புற்கள் மற்றும் செடிகொடிகள் வளர்ந்து கழிவுகளை சுத்தம் செய்ய இடையூறாக உள்ளது. அவற்றை தற்பொழுது துப்புரவுப்பணியாளர்களைக் கொண்டு மண்வெட்டி மூலம் அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியை அனைத்துப் பகுதிகளிலும் தொடர்ந்து செய்ய முடியாத நிலை உள்ளது. எனவே இப்பணியினை புல்வெட்டும் இயந்திரம் மூலம் செய்தால் அனைத்துப்பகுதிகளிலும் செடி கொடிகளை அகற்ற ஏதுவாக அமையும், ஆதலால் பொதுசுகாதார அவசரம் அவசியம் கருதி ஐந்து பொதுசுகாதாரப்பிரிவிற்கும் தலா ஒன்று வீதம் 5 புல்வெட்டும் இயந்திரம் வாங்கி பயன்படுத்துவதற்கும், இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,25,000/—க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.மேற்படி செலவினத்தை பொது நிதி அல்லது பயனர் கட்டணம் (SUC) நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.37, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

**தலைவர்**
**பரமக்குடி நகர்மன்றம்.**

**பரமக்குடி நகராட்சி அலுவலகம்,**
**நாள்.02.03.2022**

**பொருள்–1**

நிகழும் ஸ்ரீ பிலவ வருடம் மாசி மாதம் 18ம் நாள் 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2ஆம் நாள் 02.03.2022 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்ற கூட்ட அரங்கில் நகர் மன்ற உறுப்பினர்களுக்கு தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் ஆணையாளரால் பதவிப்பிரமாணம் செய்து வைத்தல்.

| வ.எண் | வார்டு | நகர்மன்ற உறுப்பினர்களின்பெயர் | பதவி |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | 1 | திரு.தே.கிருஷ்ணன் | 1வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 2 | 2 | திரு.ர.ஜீவரெத்தினம் | 2 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 3 | 3 | திரு.க.சிகாமணி | 3 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 4 | 4 | திருமதி.மு.சர்மிளாராணி | 4வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 5 | 5 | திரு.நா.பாக்கியராஜ் | 5வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 6 | 6 | திரு.து.நா.ஜெய்சங்கர் | 6வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 7 | 7 | திரு.பொ.கு.குபேந்திரன் | 7வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 8 | 8 | திருமதி.க.திருசபரிதவமணி | 8வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 9 | 9 | திருமதி.க.ராக்கமாள் | 9வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 10 | 10 | திரு.எம்.ஜி.சீனிவாசன் | 10வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 11 | 11 | திருமதி.மோ.பானுமதி | 11வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 12 | 12 | திரு.மாகி.கண்ணன் | 12வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 13 | 13 | திரு.க.அப்துல் மாலிக் | 13வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 14 | 14 | திரு.து.துரைசரவணன் | 14வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 15 | 15 | திரு.ரா.முத்துக்குமார் | 15வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 16 | 16 | திருமதி.ந.துர்க்கா | 16வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 17 | 17 | திரு.இரா.சதீஷ்குமார் | 17வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 18 | 18 | திருமதி.ரா.கவிதா | 18வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 19 | 19 | திருமதி.க.வசந்தகல்யாணி | 19வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 20 | 20 | திருமதி.அ.சுகன்யா | 20வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 21 | 21 | திருமதி.த.பிரபா | 21வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 22 | 22 | திருமதி.ர.தேவிகா | 22வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 23 | 23 | திரு.வ.மு.ப.பாக்கியம் | 23வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 24 | 24 | திரு.சே.கருணாநிதி | 24வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 25 | 25 | திருமதி.மு.குணாதேவி | 25வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 26 | 26 | திருமதி.பூ.ராதா | 26வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 27 | 27 | திருமதி.து.கனிமொழி | 27வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 28 | 28 | திருமதி.ரா.தனலெட்சுமி | 28வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 29 | 29 | திருமதி.சி.அமுதாராணி | 29வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 30 | 30 | திருமதி.மு.மாரியம்மாள் | 30வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 31 | 31 | திருமதி.இரா.ஜெயபாரதி | 31வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 32 | 32 | திரு.மு.வடமலை | 32வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 33 | 33 | திரு.மு.குணசேகரன் | 33வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 34 | 34 | திருமதி.மு.கிருஷ்ணவேணி | 34வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 35 | 35 | திருமதி.செ.ராஜலெட்சுமி | 35வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |
| 36 | 36 | திரு.ரா.மோகன் | 36வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் |

| | |
|---|---|
| | **தீர்மானம் எண்.1 இந்நகர்மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 36 நகர்மன்ற உறுப்பினர்களுக்கு இன்று (02.03.2022) என் முன்னிலையில் என்னால் பதவி பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.** |
| **பொருள்–2** | பரமக்குடி நகராட்சி நகர்மன்ற கூட்டத்தில் 04.03.2022 அன்று காலை 9.30 மணி அளவில் நடைபெற்ற நகர்மன்ற தலைவர் தேர்தலில் 24வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.சே.கருணநிதி அவர்களை பரமக்குடி தலைவராக போட்டியின்றி ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கப்படுகிறது.<br>**தீர்மானம் எண்.2, அனுமதிக்கப்பட்டது** |
| **பொருள்–3** | பரமக்குடி நகராட்சி நகர்மன்ற கூட்டத்தில் 04.03.2022 அன்று காலை 2.30 மணி அளவில் நடைபெற்ற நகர்மன்ற துணைத்தலைவர் தேர்தலில் 33வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.மு.குணசேகரன் அவர்களை நகர்மன்ற துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கப்படுகிறது.<br>**தீர்மானம் எண்.3 அனுமதிக்கப்பட்டது** |
| **பொருள்–4** | பரமக்குடி நகராட்சி நகர்மன்ற கூட்டத்தில் 31.03.2022 அன்று காலை 9.30 மணி அளவில் நடைபெற்ற வரி மேல்முறையீட்டுக்குழு உறுப்பினர்கள் தேர்தலில் 18 வது வாாடு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ரா.கவிதா, 20–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.அ.சுகன்யா, 26–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.பூ.ராதா, 28–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ரா.தனலெட்சுமி ஆகிய நான்கு நகர்மன்ற உறுப்பினர்கள் வரிமேல்முறையீட்டுக்குழு உறுப்பினர்களாக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கப்படுகிறது.<br>**தீர்மானம் எண்.4 அனுமதிக்கப்பட்டது** |
| **பொருள்–5** | தீர்மானம் எண்.5 பரமக்குடி நகராட்சி நகர்மன்ற கூட்டத்தில் 31.03.2022 அன்று காலை 9.30 மணி அளவில் நடைபெற்ற நியமனக்குழு உறுப்பினர் தேர்தலில் 2வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ர.ஜீவரெத்தினம் நியமனக்குழு உறுப்பினராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என அதிகார பூர்வமாக அறிவிக்கப்படுகிறது.<br>**தீர்மானம் எண்.5 அனுமதிக்கப்பட்டது** |
| **பொருள்–6** | பரமக்குடி நகராட்சி நகர்மன்ற கூட்டத்தில் 31.03.2022 அன்று காலை 9.30 மணி அளவில் நடைபெற்ற நியமனக்குழு உறுப்பினர் தேர்தலில் 29வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.சி.அமுதாராணி ஒப்பந்தக்குழு உறுப்பினராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என அதிகார பூர்வமாக அறிவிக்கப்படுகிறது.<br><br>**தீர்மானம் எண்.6 அனுமதிக்கப்பட்டது** |